

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திரைப்பட இயக்குநர் பாரதிராஜா அவர்களின் மகனும் நடிகருமான மனோஜ் பாரதி அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தியதையொட்டி நேற்று (26.3.2025) சென்னையிலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.

## விபத்தினாலும் உடல் நலக்குறைவினாலும் உயிரிழப்பு! வருங்காலங்களில்

# இந்து சமய அறநிலையத்துறை இதுபோன்ற சம்பவம் இனி நடைபெறாமல் தடுக்க தனிக்கவனம் செலுத்தும்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பதில்!

சென்னை, மார்ச். 27-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (26.3.2025) கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மயிலம் சட்டமன்ற உறுப்பினர் ச. சிவக்குமார் ஆகியோர் திருச்செந்தூர், தஞ்சாவூர், பழனி, இராமேஸ்வரம் ஆகிய4திருக்கோயில்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாக கொண்டு வந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு ஆற்றிய பதிலுரை.

உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களும், உறுப்பினர் அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, உறுப்பினர் ச.சிவக்குமார் சிறப்புக் கவன ஈர்ப்பினை கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு விரிவாகத்தான் பதில் சொல்ல வேண்டும். அவர்களுடைய கேள்வியின் அடிப்படையே தவறானதாக இருக்கிறது. இது விபத்து அல்ல. உயிரிழப்பு பிறகு 2 கூறுகள் இருக்கின்றன. ஒன்று விபத்தினால் ஏற்படுகின்ற உயிரிழப்பு, மற்றொன்று, உடல்நலக் குறைவினால் ஏற்படுகின்ற உயிரிழப்பு. இந்த உயிரிழப்பைப் பொறுத்தவரை, உறுப்பினர்கள் 3 பேரும் அவை அலுவல்கள் முடிந்தவுடன், பேரவைத் தலைவர் அவர்களின் அறைக்கு வந்தால், அந்த உயிரிழப்பிற்கான காரணத்தை, மூன்றாவது கண் என்று போற்றப்படுகின்ற கண்காணிப்புக் கேமராவில் பதிவாகியிருக்கின்ற அனைத்து வீடியோக்களையும் அவர்களுக்குக் காண்பிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, திருச்செந்தூர், தஞ்சாவூர், பழனி, இராமேஸ்வரம் ஆகிய 4 திருக்கோயில்களிலும் ஏற்பட்ட உயிரிழப்புகள் என்பது விபத்தின் காரணமாக அல்ல. உடல்நலக் குறைவின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள்தான்.

அதோடு மட்டுமல்லாமல்,



இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சுருக்கமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், அதிகமாக கூட்டம் கூடுகின்ற திருக்கோயில்களில், மருத்துவ வசதி தேவை என்பதை உணர்ந்து, இரண்டே இரண்டு திருக்கோயில்களில் இருந்த மருத்துவ வசதியை, 17திருக்கோயில்களில் ஏற்படுத்தித் தந்த அரசு தமிழக முதல்வர் அவர்களின் அரசு.

ஒரு சிறிய உதாரணம். நான் பெயரைக் குறிப்பிட்டுக் கூற விரும்பவில்லை. 2023 ஆம் ஆண்டு கார்த்திகை தீபத்தன்று அபிஷேகத்தில் பங்கேற்று இருந்தோம். என்னுடன் அமைச்சர் அண்ணன் திரு.எ.வ.வேலு அவர்களின் புதல்வனும் இருந்தார். ஒரு நீதிபதி அவர்கள் உடல்நலக்குறைவால் மயக்க நிலைக்கு சென்று விட்டார். அந்த நீதிபதி அவர்களுக்கு உடனடியாக சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. தமிழக முதல்வர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட திருவண்ணாமலை திருக்கோயில் மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர்கள் தான் அன்றைக்கு அந்த நீதிபதி உயிரை காப்பாற்றினார்கள். முக்கிய திருக்கோயில்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள 17 மருத்துவ மையங்களில் இதுவரையில் 7,16,187 நபர்கள் இதுவரையில் பயனடைந்திருக்கின்றார்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

தமிழக முதல்வர் அவர்கள் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கின்ற காலத்தில், வெகுதொலைவில் இருந்து வருபவர்களுக்கு உணவிற்கு என்ன செய்வார்கள் என்று சிந்தித்து,2திருக்கோயில்களில் செயல்பாட்டில் இருந்த முழுநேர அன்னதானத் திட்டத்தை 11 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தினார். அன்னதானத் திட்டத்தால் ஆண்டுக்கு மூன்றரை கோடி பக்தர்கள் இறைப்பசியோடு சேர்ந்து வயிற்று பசியையும் போக்குகின்ற தமிழகத்தின் வள்ளலார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இத்திட்டத்திற்கு ஆகின்ற செலவு ஆண்டிற்கு ரூ.120 கோடியாகும்.

திராவிட மாடல் ஆட்சியில் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டிருந்த வயது முதிர்ந்தவர்கள், உடல்நலம் குன்றியவர்கள் இறைவனை நினைத்து பக்தியோடு இறை நம்பிக்கையோடு இன்றைக்கு திருக்கோயிலை நோக்கி வருகை தருகின்றார்கள். திருக்கோயில்களில் அடிப்படை தேவைகளை நிறைவு செய்ததன் காரணமாக ஏற்கனவே வருகை தந்த பக்தர்கள் எண்ணிக்கை விட இன்றைக்கு 25 சதவீத மக்கள் கூடுதலாக திருக்கோயில்களுக்கு வருகை தந்து தரிசனம் செய்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது என்றால் தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த பெரும் முயற்சியில் தான்.

திருக்கோயில்களில் விருந்து மண்டபங்கள், முடிகாணிக்கை மண்டபங்கள், இளைப்பாறும் மண்டபங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிட வசதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தந்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுடைய எண்ணிக்கையும் கூடி இருக்கின்றது. அதோடு மட்டுமல்ல அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகின்ற திருக்கோயில்களை கண்டறிந்து அதற்கு பெருந்திட்ட வரைவு ஒன்றை ஏற்படுத்தினார். இது இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலே இல்லாத ஒரு புது முயற்சியாகும். 17 திருக்கோயில்களுக்கு 1,716 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வரைவை இன்றைக்கு ஏற்படுத்தியதன் வாயிலாக, திருச்செந்தூர் திருக்கோயிலை 7.7.2025 அன்று குடமுழுக்கு முடிந்த பிறகு பார்த்தால் திருப்பதிக்கு இணையாக அந்த திருக்கோயிலை வடிவமைத்த பெருமை நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை சாரும்.

பழனிக்கு என் அருமை சகோதரி சென்று பாருங்கள். இன்றைக்கு திருப்பதிக்கு நிகராக அந்த பழனி திருக்கோயிலை வடிவமைத்து தந்திருக்கின்றார் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதலமைச்சர் அவர்கள். உறுப்பினர் அவர்கள் இந்த கேள்வியை எழுப்பும்போது எதிர்பார்த்தது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நிதியுதவி வழங்கப்படுமா என்று நீங்கள் கேட்பீர்கள் என்றுதான். நீங்கள் கேட்கவில்லை. ஆனால் எங்கள் முதல்வர் அவர்கள் நேற்றைக்கு முன்தினமே அவர்களுடைய சூழ்நிலையை அறிந்து உண்மையிலே அவர்கள் கோரிக்கை வைப்பார்கள் என்றால் அவர்களுக்கு திருக்கோயில் சார்பில் நிதியுதவி வழங்குங்கள் என்று முதல்வர் உத்தரவிட்டிருக்கின்றார். ஆகவே அவர்களின் சூழ்நிலைக்கேற்ப கேட்ப நிதியுதவி வழங்கப்படும்.

வருங்காலங்களில் இது போன்ற நிகழ்வு கூட ஏற்படாமல், மனித உயிர் விலைமதிப்பற்றது என்பதை நன்றாக அறிந்த எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் வருகின்ற பக்தர்களின் உடல்நிலை மற்றும் நோயின் தன்மையை அறிந்து அவர்களுக்கு சிகிச்சை தேவைப்பட்டால் உடனடியாக முதலுதவியோ அல்லது தொடர் சிகிச்சையோ தேவைப்பட்டால் அதற்கும் ஏற்பாடு செய்ய சொல்லி உத்தரவிட்டிருக்கின்றார். வருங்காலங்களில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கு இந்து சமய அறநிலையத்துறைய கூடுதல் கவனம் செலுத்தும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக கேள்வி எழுப்பிய மூன்று உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திருவண்ணாமலையின் கடந்த காலநிலை என்ன, தற்போதைய நிலை என்ன என்பதனையும் நன்றாக உணர்ந்தவர் என்பதையும் பேரவை தலைவர் வாயிலாகஅக்ரிகிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு தெரிவித்து அமருகிறேன் நன்றி வணக்கம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## துறையூர் சட்டமன்றத் தொகுதியில்

# புதிய துணை சுகாதார நிலையம் அமைய நடவடிக்கை எடுக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மார்ச். 27-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.03.2025) சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்.



**துறையூர் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

துறையூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் கோம்பை, வண்ணாடு ஆகிய இரு ஊராட்சிகள் இருக்கின்றன. கோம்பையைப் பொறுத்தவரை, எட்டு கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சியாகவும், அதனுடைய மக்கள் தொகை 2,039 என்கின்ற வகையிலும், வண்ணாடு என்கின்ற ஊராட்சி எட்டு கிராமங்களை உள்ளடக்கியதாகவும் அதனுடைய மக்கள் தொகை 1455 என்கின்ற வகையிலும் இருந்துக் கொண்டிருக்கின்றன. இந்த இரு ஊராட்சிகளிலும் ஏற்கெனவே இரண்டு துணை சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்த இரண்டு துணை சுகாதார நிலையங்களும் அதற்குட்பட்ட மக்களைப் பொறுத்தவரை இடைநிலை சுகாதார செவிலியர்கள் மூலம் eSan jeevani முறையில் செங்காட்டுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, புதியதாக அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கோம்பையை பொறுத்தவரை, கோம்பை புதூர், குண்டூர், ஏரிக்காடு, எருமப்பட்டி, மருதை, மேலூர், தாளூர், செம்புலிச்சாம்பட்டி என்கின்ற 8 கிராமங்கள் இருக்கின்றன. அதேபோல் வண்ணாடு பகுதியை பொறுத்தவரை, இலுப்பூர், புதூர், கிணத்தூர் போன்ற 8 கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஊராட்சிக்குட்பட்டவை, 8 கிராமங்கள், 8 கிராமங்கள்தான். உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் 30,40 கிராமங்களெல்லாம் இல்லை. வேறு ஊராட்சியில் இருப்பதையெல்லாம் சேர்த்து சொல்கிறார்கள். இங்கு இரண்டு துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப் பெற்று, இன்னும் ஒரு புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிய அரசின் விதிமுறைகளின்படி, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் சமதள பகுதியி அமைய வேண்டுமென்றால், 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். மலைக் கிராமங்கள் என்றால், 20,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். துணை சுகாதார நிலையம் அமைய வேண்டுமென்றால், சமதள பகுதியில் 5000 மக்கள் தொகை இருக்க வேண்டும். கிராமப்புறங்கள் 3000 மக்கள் தொகை இருக்க வேண்டும். இந்த விதிமுறைகள் இருக்கின்றனவா என்பதை அறிவுகூர்ந்து...

கடற்கரை பகுதி சமதள பகுதியில் வந்து விடும். 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். இந்த விதிமுறைகளின்படி இருக்கின்றதா என்பதை நாம் வரையறுத்துக் கொள்ள வேண்டும். அதில் எத்தனை துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன, எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்பதை கணக்கில் வைத்துக் கொண்டு அதற்கு பிறகு கேட்கலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் 80 ஆயிரம் helmet villages இருக்கின்றன. அனைத்து villages-க்கும் ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்பது எல்லோருடைய கோரிக்கையாக இருக்கும், மக்களுடைய விருப்பமும் இருக்கும். அதை நிறைவேற்றுவதற்கு அரசு விதிமுறைகளில் இடம் கிடைக்க வேண்டும். ஆனாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, எதிர்காலத்தில் புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், வட்டம் சாரா மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் என்று Sanctioned strength என்கின்ற வகையிலான மருத்துவ பணியிடங்கள் இருக்கின்றன. அந்தப் பணியிடங்கள் காலியாகாமல் இருக்கின்றதா என்பதை மட்டுமே பார்த்துக் கொள்ள முடியும். அந்தவகையில் புதிய பணியிடங்களை உருவாக்குதற்குரிய நோயாளிகளின் எண்ணிக்கை கூடுதல் போன்ற பல்வேறு விஷயங்கள் ஆராயப்பட்டுதான் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று எதிர்காலத்தில் அங்கே வருகிற நோயாளிகளின் எண்ணிக்கை, வழங்கப்பெறுகிற சிகிச்சை முறைகள் கண்டறிந்து புதிய பணியிடங்கள் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**செய்யார் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

இந்த 15 கிலோ மீட்டருக்கு இடைவெளியில் எத்தனை துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து சட்டமன்ற உறுப்பினர் நாளை என்னிடத்தில் தனியாக தெரிவிப்பாரேயானால் இல்லாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் அவர் மனநிறைவு கொள்ள வேண்டும் என்று தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் பதிலளித்தார்.

## குரோம்பேட்டை குமரன் குன்றம் திருக்கோயில் வாசலில்

# ரூபாய் 50 லட்சத்தில் வெளிப்புற நிழற்குடை!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பணிகளை துவக்கி வைத்தார்!

பல்லவபுரம், மார்ச் 27-

பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் குரோம்பேட்டை பகுதியில் மிகவும் புகழ்பெற்ற திருக்கோயில் குமரன் குன்றம் மலை மேல் அமைந்துள்ள அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சென்னை மக்களிடையே மிகப்பெரிய புகழ் பெற்ற திருக்கோயில் ஆகும் தினசரி ஏராளமான பக்தர்கள் வருகை தந்து மலை மேல் சென்று சுவாமி தரிசனம் செய்து வருகிறார்கள் அதிலும் புகழ்பெற்ற திருவிழா நாட்களில் ஆயிரம் கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து மலை மேலே ஏறி சுவாமி தரிசனம் செய்கிறார்கள் சுவாமி தரிசனம் செய்ய வரும் பக்த கோடிகள் வெயிலிலும் மழையிலும் காத்திருந்து சாமி தரிசனம் செய்ய வேண்டிய நிலை உள்ளதை பார்த்த பல்லாவரம் சட்டமன்ற இ.கருணாநிதி பக்தர்கள் வசதிக்காக வெளிப்புற நிழற்குடை அமைத்து தருகிறேன் என்று வாக்குறுதி அளித்தார்.

அதைத்தொடர்ந்து தமது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் வெளிப்புற நிழற்குடை அமைக்க ஏற்பாடு செய்து இன்று ஆலயத்திற்கு நேரில் வருகை தந்து அடிக்கல் நாட்டி நிழற்குடை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார் அப்பொழுது அங்கு இருந்த பக்தர்கள் அனைவரும் மகிழ்ச்சியை தெரிவித்தார்கள் அப்பொழுது மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் மாமன்ற உறுப்பினர்கள் சரஸ்வதி சந்திரசேகர் சங்கீதா விஜய் சமூக சேவகர் சந்தானம் ஆலய நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் அப்பகுதி பொதுமக்கள் அனைவரும் திரண்டு இருந்தனர்

## பொதுவிநியோக மையங்களில்

# பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா?

## மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி மார்ச் 27

நாட்டில் உள்ள பொது விநியோக மையங்களில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா? என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு



பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பதப்படுத்தப்பட்ட தானிய வகைகள் பருப்பு வகைகள் வழங்கப்படுகிறதா?

அவ்வாறு வழங்கப்பட்டால் சத்து மிகுந்த பொருட்கள் இணைத்து வழங்கப்படுவது குறித்து விவரமாக தெரிவிக்கவும்

மாநிலங்கள் மற்றும் துணை நிலை மாநிலங்கள் வழங்கப்படும் தானியங்கள் குறித்து விவரிக்கவும்

விநியோகம் செய்யப்படும் தானியங்கள் தரம் குறித்து கண்காணிக்கப்படுகிறதா?

ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பான பிரச்சனைகள் இந்த வகை தானியங்களால் நிவர்த்தி செய்யப்படுகிறதா?

விநியோகிக்கும் பொருட்களின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

இவ்வாறு கேள்வி பதில் எழுப்பி இருந்தார். அதற்கு ஒன்றிய பயனாளிகள் மற்றும் உணவுத்துறை இணை அமைச்சர் விளக்கமாக பதிலளித்தார்.

## தர்மபுரி மேற்கு மாவட்ட மூத்த கழக முன்னோடி

# சி.தேசிங்குராஜன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 27–

தருமபுரி மேற்கு மாவட்ட மூத்த கழக முன்னோடி சி.தேசிங்கு ராஜன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்ட மூத்த கழக முன்னோடிகளில் ஒருவரும் – அரூர் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும் – மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக பொறுப்பு வகித்து வரும் சி.தேசிங்குராஜன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் –தருமபுரிமேற்குமாவட்டகழகஉடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வந்தவாசி நகரம், 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கே. நாகூர்மீரான் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ஆர்.அன்பரசு ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26.03.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சென்னை, பி.எம்.பிர்லா கோளரங்க வளாகத்தில் நேற்று (26.03.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், அறிவியல் திருவிழா 2025–ஐ தொடங்கி வைத்து அங்கு அமைக்கப்பட்டிருந்த அறிவியல் கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அறிவியல் நகர துணைத் தலைவர் மற்றும் முதன்மைச் செயலாளர் தேவ் ராஜ் தேவ், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற துணைத் தலைவர் எம்.பி.விஜயகுமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் குரோம்பேட்டை குமரன் குன்றம் மலை மேல் அமைந்துள்ள பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பல்லாவரம் சட்டமன்ற இ.கருணாநிதி பக்தர்கள் வசதிக்காக தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் வெளிப்புற நிழற்குடை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார். உடன் ஜோசப் அண்ணாதுரை உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.